# முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2023

Reg.No.

## ஒன்பதாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 10 x 1 = 10

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு - தடித்த சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு -
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
3. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு
   இ) இலஞ்சி ஈ) புலரி
4. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ________
   அ) பாவாணர் ஆ) கம்பர்
   இ) பாரதிதாசன் ஈ) கால்டுவெல்
5. மிசை என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே
   இ) இசை ஈ) வசை
6. பெரியபுராணத்தின் ஆசிரியர் ________.
   அ) கம்பர் ஆ) குடபுலவியனார்
   இ) அறிவுஒளி ஈ) சேக்கிழார்

***கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.***

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மட அன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனை ஒவ்வா நலமெல்லாம்

7. இப்பாடல் இடம் பெற்றுள்ள செய்யுள் ________.
   அ) தமிழ்விடு தூது ஆ) பெரியபுராணம்
   இ) புறநானூறு ஈ) தமிழோவியம்
8. கழை என்னும் சொல்லின் பொருள் ________.
   அ) கரும்பு ஆ) சோலை
   இ) அரும்பு ஈ) மொட்டு
9. காடெல்லாம் ? பிரித்து எழுதுக
   அ) கா + எல்லாம் ஆ) காடு + எல்லாம்
   இ) கா + டெல்லாம் ஈ) காடு + வெல்லாம்
10. கருங்குவளை - இலக்கணக்குறிப்பு தருக
    அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
    இ) வேற்றுமைத்தொகை ஈ) உருவகம்

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 x 2 = 10

11. நீங்கள் பேசும் மொழி எந்த மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது?
12. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
13. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



14. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
15. உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே- குறிப்பு தருக.
16. கூவல் என்று அழைக்கப்படுவது எது?

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 x 3 = 6

*(19 வது வினா கட்டாய வினா)*

17. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
18. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கிறது?
19. தித்திக்கும் தெள்ளமுதாய் எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடலை எழுதுக.

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 3 x 4 = 12

20. தன்வினை பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
21. கலைச்சொல் தருக :
    அ) Irrigation Technology ஆ) Lexicon இ) Morpheme ஈ) Tropical Zone
22. *பொருத்தமான பெயரடைகளை எழுதுக. (நல்ல, இனிய, கொடிய, பெரிய)*
    1. எல்லோருக்கும் ________ வணக்கம்.
    2. அவன் ________ நண்பனாக இருக்கிறான்.
    3. ________ விலங்கிடம் பழகாதே.
    4. ________ ஓவியமாக வரைந்து வா.
23. *அடைப்புக்குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக*
    1. நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் (வினாத்தொடராக)
    2. இசையின்றி அமையாது பாடல் (உடன்பாட்டுத் தொடராக)
    3. நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக)
    4. குமரன் மழையில் நனைந்தான் (எதிர்மறைவினைத்தொடராக)
24. *காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.*



**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 2 x 6 = 12

25. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை எழுதுக

*(அல்லது)*

ஆ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித்தருக

26 அ) உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் கால்முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் ஆழத்தை கட்டுரையாக எழுதுக.

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com